**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை – திருமதி.S.ஆனந்தவல்லி, B.A., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை
2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை.
இடைநிலை மனு எண்.3/2025
உள்
அசல் வழக்கு எண்.23/2022
––––

வேலுச்சாமி .... மனுதாரர்/பிரதிவாதி

/எதிரிடை/

செல்வராஜ் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 08.08.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 17.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் B.திருப்பதி அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிட கோரி மனு உ.வி.மு.ச. பிரிவு 151 –ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

(1) எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது சில முக்கியமான விசயங்களை பற்றி சொல்ல விட்டுபோய்விட்டது. அதனால் தற்போது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்கிறேன். என் தரப்பில் முக்கியமான ஆவணம் அதாவது தாவா சொத்தை

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

என் தாத்தா ராமலிங்க ரெட்டியார் 23.02.1951ல் கிரயம் வாங்கிய பத்திரத்தை பற்றி கூறிவிட்டு போய்விட்டு விட்டதால் அதை பற்றி தற்போது கூறியுள்ளேன். அந்த ஆவணம் என் சித்தப்பா வீட்டில் இருந்ததால் அவர்கள் ஜீன் மாதம் 2ம் வாரத்தில்தான் அதை என்னிடம் காண்பித்தார்கள். அதன் ஜெராக்ஸ் நகலை வாங்கி பார்த்து இந்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்கிறேன். அதனால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய காலதாமதம் ஆகிவிட்டது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்று ஏற்பட்டதல்ல.

(2) மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் கண்டுள்ள விசயங்கள் இவ்வழக்கிற்கு எனது தரப்பிற்கு மிகவும் அவசியமாக இருக்கிறது. மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையின் மூலம் வழக்கு விசாரணையில் வாதங்களும் குறையக்கூடியதாக இருக்கிறது. எனவே, மேற்படி என் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடதத வேண்டியது அவசியமாய் இருக்கிறது. மனு அனுமதிக்கப்படவேண்டியது.

3. <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த மறுப்புரை சுருக்கம்</u>:-

மனுதாரர்/பிரதிவாதி அசல் வழக்கில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தின் ஒரு பகுதி தனக்கு அரசு ஒப்படைப்பு மூலம் பாத்தியம் என கூறியுள்ளார். தற்போது வாதி தரப்பில் PW1, PW2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் விசாரணைக்காக வழக்கு நிலுவையில் உள்ள போது பிரதிவாதி தான் ஏற்கனவே எடுத்த நிலைப்பாட்டினை மாற்று புதிதாக ஒரு நிலைப்பாடு எடுத்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். வழக்கு விசாரணைக்கு பின்பு வழக்கின் முழு நிலைப்பாடு மாறக்கூடிய எவ்வித கூடுதல் வழக்குரையும் ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகும். அது சட்டப்படி அனுமதிக்கத்தக்கதல்ல. அசல் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே காலம் கடந்து பின்சிந்தனையுடன் இம்மனு தாக்கல்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு விசாரணை கடந்த 21.12.2023ம் தேதி தொடரப்பட்டு பிரதிவாதியால் இரண்டு வருடகால நிலுவையில் உள்ளது. மனுவில் எவ்வித நல்லெண்ணமும் இல்லை. மனு வீண் அலைக்கழிவானது.

4. **<u>தீர்வு காணவேண்டிய பிரச்சினை</u>** :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?, இல்லையா? என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டியது ஆகும்.

**<u>தீர்வு</u>:-**

(5) மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரரின் மறுப்புரை பரிசீலிக்கப்பட்டது.

(6) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(7) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. தற்போது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய காலதாமதமாகிவிட்டது என கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்தக்கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் காரணமாக தாவாச்சொத்தை மனுதாரர்/பிரதிவாதியின் தாத்தா ராமலிங்கரெட்டியார் 23.02.1951ல் கிரயம் வாங்கிய பத்திரத்தை பற்றி கூற விட்டுப்போய்விட்டதால் அதைப்பற்றி தற்போது சொல்லியுள்ளேன் என்றும் மேற்படி ஆவணம் மனுதாரர்/பிரதிவாதியின் சித்தப்பா வீட்டில் இருந்ததால் ஜீன் மாதம் 2ம் வாரத்தில்தான் தன் கைக்கு கிடைத்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஜீன் மாதம் 2ம் வாரத்தில் ஆவணத்தை பார்த்ததாக சொல்லியுள்ள மனுதாரர் 02.08.2025ல் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணமும் மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

(8) அசல் வழக்கானது வாதி தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக 19.06.2025 லிருந்து நிலுவையில் இருந்து வருகின்ற நிலையில் 02.08.2025 ம் தேதி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 07.07.2022 ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த எதிர்வழக்குரையில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக ரிசர்வ் செய்துகொள்வதாக குறிப்பிடப்படவில்லை. மேலும், தாவாச்சொத்து மனுதாரர்/பிரதிவாதிக்கு 08.08.1994 ம் தேதியில் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் பிரதிவாதிக்கு ஒப்படைவு உத்தரவு வழங்கி அதனடிப்படையில் தாவாச்சொத்து பிரதிவாதிக்கு பாத்தியமானது என்று மனுதாரர்/பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

(9) 21.12.2023 ம் தேதி வாதி வா.சா.1 ஆக முதல்விசாரணை செய்யப்பட்டு 09.09.2024 ம் தேதி மனுதாரர்/பிரதிவாதியால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்தபோது பிரதிவாதி பெயருக்கு வழங்கப்பட்ட ஒப்படைப்பு பட்டாவை ரத்து செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்று வா.சா.1 யிடம் கேள்விகேட்டு பதில்பெறப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் 07.07.2022 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துவிட்டு அதனடிப்படையில் வழக்கில் எதிர்வாதம் செய்யப்பட்டு வா.சா.1 ஐ குறுக்குவிசாரணையும் செய்துள்ளனர். அவ்வாறு இருக்க தாவாச்சொத்தைப்பொறுத்து தன்னுடைய தாத்தா கிரயம் பெற்றுள்ளார் என்று தற்போது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளது ஏற்கக்கூடியதாக இல்லை.

(10)ஏற்கனவே, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாவாச்சொத்தைப் பொறுத்து ஒருவாதம் செய்துவிட்டு அற்கு முரண்பட்டு மற்றொருவாதத்தை எடுப்பதற்கு மனுதாரர்/பிரதிவாதி தடைபட்டுள்ளார் (Constructive Resjudicata). ஆகவே, மேற்கண்ட

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

விவாதங்களிலிருந்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யக்கேட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
அருப்புக்கோட்டை

<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
அருப்புக்கோட்டை

-------------------------------------------------
மு.மா.உ.நீ. அருப்புக்கோட்டை,
இடைநிலை மனு எண். 3/2025
உள்
அசல் வழக்கு எண். 23/2022
சீரான/வரைவு உத்தரவு
நாள் 27.11.2025
-----------------------------------------